
T-UN-462

உ

கடவுள் துணை.

# குதம்பைசித்தர்

## பாடல்.



பி. முருகேசமுதலியார் அவர்களது,

ஸ்ரீசுப்பிரமணியவிலாச அச்சுக்கூடம் சென்னை.

1930.

உ

சிவமயம்

# குதம்பைசித்தர் பாடல்

வெட்டவெளிதன்னை
மெய்யென்றிருப்பார்க்கு
பட்டயமேதுக்கடி குதம்பாய்
பட்டயமேதுக்கடி 1

மெய்ப்பொருள்கண்டு
விளங்குமெய்ஞ்ஞானிக்குக்
கற்பங்களேதுக்கடி குதம்பாய்
கற்பங்களேதுக்கடி 2

காணமற்கண்டு
கருத்தோடிருப்பார்க்கு
வீணாசையேதுக்கடி குதம்பாய்
வீணாசையேதுக்கடி

வஞ்சகமற்று
வழிதன்னைகண்டோர்க்கு
சஞ்சலமேதுக்கடி குதம்பாய்
சஞ்சலமேதுக்கடி 4

ஆதாரமான
வடிமுடிகண்டோர்க்கு
வாதாட்டமேதுக்கடி குதம்பாய்
வாதாட்டமேதுக்கடி 5

நித்திரைகெட்டு
நினைவோடிருப்பார்க்கு
முத்திரையேதுக்கடி குதம்பாய்
முத்திரையேதுக்கடி 6

தந்திரமான
தலந்தனினிற்போர்க்கு
மந்திரமேதுக்கடி குதம்பாய்
மந்திரமேதுக்கடி 7

சத்தியமான
தவத்திலிருப்போர்க்கு
உத்தியமேதுக்கடி குதம்பாய்
உத்தியமேதுக்கடி 8

நாட்டத்தைப்பற்றி
நடுவணைச்சேர்வோர்க்கு
வாட்டங்களேதுக்கடி குதம்பாய்
வாட்டங்களேதுக்கடி 9

முத்தமிழ்கற்று
முழங்குமெய்ஞ்ஞானிக்குச்
சத்தங்களேதுக்கடி குதம்பாய்
சத்தங்களேதுக்கடி 10

உச்சிக்குமேற்சென்
றுயர்வெளிகண்டோர்க்கு
இச்சிப்பிங்கேதுக்கடி குதம்பாய்
இச்சிப்பிங்கேதுக்கடி 11

வேகாமல்வெந்து
வெளியொளிகண்டோர்க்கு
மோகாந்தமேதுக்கடி குதம்பாய்
மோகாந்தமேதுக்கடி 12

சாகாமற்றாண்டி
தனிவழிபோவோர்க்கு
ஏகாந்தமேதுக்கடி குதம்பாய்
ஏகாந்தமேதுக்கடி 13

அந்தரந்தன்னி
லசைந்தாடுமுத்தர்க்கு
தந்திரமேதுக்கடி குதப்பாய்
தந்திரமேதுக்கடி 14

ஆனந்தம்பொங்கி
அறிவோடிருப்போர்க்கு
ஞானந்தானே துக்கடி குதம்பாய்
ஞானந்தானே துக்கடி 15

சித்திரக்கூத்தைத்
தினந்தினங்காண்போர்க்குப்
பத்திரமே துக்கடி குதம்பாய்
பத்திரமே துக்கடி 16

முக்கோணந்தன்னின்
மூணைத்தமெய்ஞ்ஞானிக்குச்
சட்கோணமே துக்கடி குதம்பாய்
சட்கோணமே துக்கடி 17

அட்டதிக்கெல்லா
மசைந்தாடுநாதர்க்கு
நட்டணையே துக்கடி குதம்பாய்
நட்டணையே துக்கடி 18

முத்திபெற்றுள்ள
மூயங்குமெய்ஞ்ஞானிக்குப்
பத்தியமே துக்கடி குதம்பாய்
பத்தியமே துக்கடி 19

அல்லலை நீக்கி
யறிவோடிருப்பார்க்குப்
    பல்லாக்கே துக்கடி — குதம்பாய்
    பல்லாக்கே துக்கடி 20

அட்டாங்கயோக
மறிந்தமெய்ஞ்ஞானிக்கு
    முட்டாங்கமே துக்கடி — குதம்பாய்
    முட்டாங்கமே துக்கடி 21

வேகமடக்கி
விளங்குமெய்ஞ்ஞானிக்கு
    யோகந்தானே துக்கடி — குதம்பாய்
    யோகந்தானே துக்கடி 22

மாத்தானை வென்று
மலைமேலிருபபோர்க்குப்
    பூத்தானமே துக்கடி — குதம்பாய்
    பூத்தானமே துக்கடி 23

செத்தாரைப்போலத்
திரியுமெய்ஞ்ஞானிக்குக்
    கைத்தாளமே துக்கடி — குதம்பாய்
    கைத்தாளமே துக்கடி 24

கண்டாரைநோக்கிக்
கருத்தோடிருப்பார்க்குக்
கொண்டாட்டமேதுக்கடி குதம்பாய்
கொண்டாட்டமேதுக்கடி 25

காலனைவென்ற
கருத்தறிவாளர்க்குக்
கோலங்களேதுக்கடி குதம்பாய்
கோலங்களேதுக்கடி 26

வண்காயமுண்டு
மிளகுண்டுசுக்குண்டு
உண்காயமேதுக்கடி குதம்பாய்
உன்காயமேதுக்கடி 27

மாங்காய்ப்பாலுண்டு
மலைமேலிருப்போர்க்குத்
தேங்காய்ப்பாலேதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப்பாலேதுக்கடி 28

பட்டணஞ்சுற்றிப்
பகலேதிரிவார்க்கு
முட்டாக்கேதுக்கடி குதம்பாய்
முட்டாக்கேதுக்கடி 29

சாவாரமில்லை
தனக்கொருவீடில்லை
தேவாரமேதுக்கடி குதம்பாய்
தேவாரமேதுக்கடி 30

தன்னையறிந்து
தலைவனைச்சேர்ந்தோர்க்கு
பின்னாசையேதுக்கடி குதம்பாய்
பின்னாசையேதுக்கடி 31

பத்தாவுந்தானும்
பதியோடிருப்பார்க்கு
உத்தாரமேதுக்கடி குதம்பாய்
உத்தாரமேதுக்கடி 32

குதம்பைசித்தர் பாடல்
முற்றிற்று.

ஸ்ரீ சுப்பிரமணியவிலாசம் பிரஸ், சென்னை.

T-UN-461

ஓம்.

# அஷ்டோத்ர சிவநாமாவளி.

சுத்தப்பிர்ம்ம பராத்பரராம்
காலாத்மகபர மேஸ்வரராம்
சச்சிதானந்த விக்கிரஹராம்
சதாசிவநாம பிரகாசகராம்
ஹாடகக்ஷேத்திர வாஸகராம்
ஹரிப்பிர்மாதி யுபாஸகராம்
ஸ்கந்தகணாதிப போஷகராம்
சுந்தரமூர்த்தி விசுவாசகராம்
கமலக்கண்ணன் தொழுதவராம்
கைலாயத்தில் எழுந்தவராம்
ஹரியினிடத்தி லிருந்தவராம்
அமரேசனிடத்தில் வந்தவராம்
இந்திரனிடத்தி லிருந்தவராம்
முசுகுந்தனா லிவிடம் வந்தவராம்
காமனைக்கண்ணா லெரித்தவராம்
சோமனைத்தலையில் தரித்தவராம்
காலனைக்காலா லுதைத்தவராம்
பாலனைத்தேரா லரைத்தவராம்
பூமன்தலையை யெடுத்தவாம் 10

சோமன்சாபம் விடுத்தவராம்
மாமன்வேள்வி கெடுத்தவராம்
எமன்பாகம் தடுத்தவராம்
கல்லாலின்கீ ழிருந்தவராம்

கமலாம்பிகைமன முகந்தவராம்
கௌணகாதிகட் குபதேசகராம்
மௌனிகளுளத்தில் வாசகராம்
மலைமகள் தன்னை மணந்தவராம்
விலைமகள் வாசல் நடந்தவராம்
பரவைக்குத்தூது நடந்தவராம்
பார்புகழாரூர்ச் சிறந்தவராம்
சேஷாயிஹிருதய வாசகராம்
சோழன்மக னுபசாகராம்
ஆலகாலவிட முண்டவராம்
பாலசந்திரனைமுடி கொண்டவராம்
அடிமுடிகாணாமல் நின்றவராம்
கொடிமுடிமீதினி லமர்ந்தவராம்
கங்கையைச்சடையிற் றரித்தவராம்
மங்கையைமடியில் பரித்தவராம்
கரிதனை யுரித்துரி போர்த்தவராம்

நரிதனைப் பரியாய்ப் பார்த்தவராம்
சூலம் மழுமான் தரித்தவராம்
கால காலனை நிகர்த்தவராம்
திங்களைச்சடையி லணிந்தவராம்
பங்கயத்திருவும் பணிந்தவராம்
அன்பர்செய்குற்றங்கள் பொறுப்பவராம்
அன்னவர்தம் முள்ளத் திருப்பவராம்
பாம்புபுலிக்குப் பதங்கொடுத்தவராம்
நோன்புசோமாஜியாக முடித்தவராம்
பறையனுநின்றங்கு நடித்தவராம்
மறையவரேசப் (பள்ளு) படித்தவராம்
செத்தக்கன்றைச் சுமந்தவராம்

மெத்தமதுவுண்டு மகிழ்ந்தவராம்
பறை யறைந்து மெத்த வுகந்தவராம்
...றையவர்போற்றத் தகுந்தவராம்
அல்லியங்கோதை மணந்தவராம்
மெல்லிய ஜவந்திதோ டணிந்தவராம்
சந்திர சூரியாக்கினி லோசனராம்
இந்திராதி பாப விமோசனராம்
சாமகானத்தி லுகந்தவராம்

சோம பானத்தி மகிழ்ந்தவராம்
மந்தி பூஜிக்கவரம் கொடுத்தவராம்
மந்சஹாஸத்துட னிருப்பவராம்
பாசங் சாணுப் பாவனராம்
பக்தர் காணும் சோபனராம்
புற்றிடங் கொண்ட பண்ணியராம்
போற்றுசற் கரிய கண்ணியராம்
ஆரூர்ப் பிறந்தார்க் கடியவராம்
மருவோர் பிறவி வேரறுப்பவராம்
பங்குனி வுற்சவம் கொண்டவராம்
எங்கு நிறைந் திருக்கின்ற வராம்
ஒருவனு யுலகேத்தி நின்ற வராம்
ஓருரு மூவுருவானவராம்
பத்மா சூரன் வர மளித்தவராம்
சித்த மயங்கி யோடியொளித்தவராம்
சிங்கமாய்ப் பறை கடித்தவராம்
பங்க மில்லாப்பதம் கொடுத்தவராம்
வீதி னுடங்க னுபார்ஸ கராம்
சோதி ரூப பிரகாச கராம்
பஸ்ம மணிந்து களித்த்வராம்

அபஸ்மாரமேறி மிதித்தவராம்
செங்கழுநீர்மலர் புனைந்தவராம்
ஓங்கோயில்சூழ விருந்தவராம்
கோங்கலர்சேர விருந்தவராம்
பூங்கோயில்கொண்டெழுந்தவராம்
ஸ்ரீபுரமறிந்து நிலைத்தவராம்
திரிபுர மெரித்துத் தொலைத்தவராம்
வந்திபிட்டுக்காசைப் பட்டவராம்
மந்திகூப்பிட்டிங் குற்றவராம்
பாண்டியன்பிரம்படி பட்டவராம்
ஆண்டியைப்பெற்று விட்டவராம்
காளையிலேறிக் கார்த்தவராம்
வாளையின்கண்ணைப் பேர்த்தவராம்
மறைமுடிகாணாப் பெரியவராம்
நிறைகைலாயத் துரியவராம்
பைரவவேடந் தரித்தவராம்
பையரவேந்தி யிருந்தவராம்
சிறுகல்லடியுண்டு மகிழ்ந்தவராம்
மார்க்கண்டன்பூஷித்துப் பணிந்தவராம்

மார்பில்யந்திர மணிந்தவராம்
பார்த்திபன்வில்லடி பட்டவராம்
பார்முழுதும்நோக விட்டவராம்
கலிசெலாநகர் கார்த்தவராம்
புலித்தோலாடை போர்த்தவராம்
ருத்ராக்ஷமாலா பூஜிதராம்
உத்திரதீர்த்த பிரஸாதகராம்
ருத்திரகணங்கள் சேவிதராம்

இந்திரனிடத்தில் கோபிதராம்
பிட்டுவடையில்பிரிய முள்ளவராம்
[illegible]ட்டுஜடையில்காந்தி யுள்ளவராம்
அடியார்தங்கட்க் கெளியவராம்
அஜபாநடனம் புரிபவராம்
அறிதற்கரிய அற்புதராம்
ஆழித்தேரூர் வித்தகராம்
அமராதீஸ்வர அர்ச்சகராம்
அருமை பெருமையுள்ள ஆண்டவராம்
அரவாபரணம் பூண்டவராம்
புன்னகையால்புர மெரித்தவராம்

பெருவிரலால்தேர் நெரித்தவராம்
மறலிதன்றூதரை தடுப்பவராம்
மால்விடையேவரங் கொடுப்பவராம்
மலைபகளார்பார் கொண்டவராம்
மாணிக்கவாசகன் கண்டவராம்
ஜலந்தரன் றன்னைக் கொன்றவராம்
ஜகத்முழுதும் வென்றவராம்
சுடலையில் நின்று நடித்தவராம்
சூட்சுமதேசங் கொண்டவராம்
பிஞகவில்லைப் பிடித்தவராம்
பீடைகள்போக நடித்தவராம்
அர்த்தமண்டபத் திருப்பவராம்
அனந்தசயனன் தரிப்பவராம்
தாருகவனஜன பாவனராம்
தவரிஷிகபிலோ பாஸகாம்
ஸஜ்ஜஞபி மானசராம்

துஜ்ஜானபி விநாசகராம்
தீர்த்தமகிமை யுரைத்தவராம்
கீர்த்திபரவச் செய்தவராம்
தேவிக்கு புண்ணியமி சென்றவராம்
பூவிக்கு புண்ணிய மிசென்றவராம்
விருத்தரார்ய் வேட்டந்தரித்த வராம்
தீர்த்தத்தில் விழுந்து நவித்தவராம்
அம்பிகையை யழச்செய்தவராம்
எம்பிரானென் றறியர் திருந்தவராம்
தாவியெடுக்கப் பிழைத்தவராம்
பாவி முழுசப்பதம் கொடுத்தவராம்
தப்பிக் கரையேறி வந்தவராம்
ஒப்பிக் கைலாயந்தந்த வராம்
தேவியுடன் கூட வந்தவராம்
பாவிக்குப் பதம் தந்தவராம்
தீர்த்த மகத்தும் மறைந்தவராம்
பார்த்தவர் பாவங்கள் துறந்தவராம்
மூர்த்திவிசேட முள்ளவராம்
பார்த்திபலிங்கமாயுள்ளவராம்
தத்துவார்த்த ஸ்வரூபகராம்
தத்துமி தாள பிரேமகராம்
பஞ்சாட்சரத்திணுட் பொருளாம்
பஞ்சமன் பின்னல் செல்பவராம்
சத்த விடங்கரில் மூத்தவராம்

சுத்தப் பிர்ம்மமாய்க் காத்தவராம்
சுத்த மத்தள பிரியகராம்
நித்திய பிர்ம்ம சுபகராராம்
சோமாஸ்கந்த ஸ்வரூபகராம்

ஹேம வசந்த உல்லாசகராம்
வீரகட்க சோபிதராம்
கோரபாப விநாசகராம்
மூலாதாரத்தில் வாசகராம்
மூலமந்திரோப தேசகராம்
ராஜயோகிக ளறிந்தவராம்
ராஜரீகம் தெரிந்தவராம்
பஞ்சநதத்தில் வசிப்பவராம்
தஞ்சமென்பவரை காப்பவராம்
பிக்ஷாடனவேடங் கொண்டவராம்
பிர்ம்மகபாலத்தி லுண்டவராம்
பித்தனெனவழைக்க மகிழ்ந்தவராம்
சித்தர் மனங்களிக்கச் சிறந்தவராம்
பச்சிலை சாத்தப் பதமளிப்பவராம்
எச்சிலையுண்டு களித்தவராம்
நமிநந்தி விளக்கெரித்தவராம்

திமில் நந்தி நிற்ககளித்தவராம்
கோடிருத்திரராய்க் காட்சிகொடுத்தவராம்
கோடி பாபங்கள் போகவிடுத்தவராம்
பிச்சை யேற்றுண்டு களிப்பவராம்
இச்சையுளதெலா மளிப்பவராம்
அரக்கன் போற்ற வபயங் கொடுத்தவராம்
இரக்கமுடன்கை விடுத்தவராம்
பாணன் பதிக்கீடு பட்டவராம்
பாவையுடன் காவல் காத்தவராம்
பிர்ம்மன் யாகத்தில் உதித்தவராம்
தர்மம் ஸ்தாபிக்க குதித்தவராம்
ஆரூரென்ப தவரூராம்

அஜபாநடேசரென்ப தவர்பேராம்
ஹாடகக்ஷேத்திரமென்ப தவரூராம்
அணியாரூரானென்ப தவர்பேராம்
கலிசெலாநகரென்ப தவரூராம்
கனகவசந்தரென்ப தவர்பேராம்
கமலைப்பதியென்ப தவரூராம்
கமலைத்தியாகரென்ப தவர்பேராம்
தாயாய்உலகைத் தந்தவராம் 100

தாயாய்சிரபுரம் வந்தவராம்
கொடியேன்வினையைப் பரிப்பவராம்
குருவாயுருவந் தரிப்பவராம்
சமயமும்மதமுங் கடந்தவராம்
தமையறிந்தவர்பி னடந்தவராம்
பூரணசுகத்தை யருள்பவராம்
ஆரணமுடிவி லமர்ந்தவராம்
அருளேவடிவா யுடையவராம்
பொருளேயடியவர் கருப்பவராம்
புத்தமுதளிக்கும் புண்ணியராம்
தத்துவமுணர்ந்தோர்க் கண்ணியராம
தற்பரபோக சுகோதயராம்
சிற்பரமெம தயாநிதராம்
காழிப்பதிவரு கவுணியராம்
ஊழித்திருவடி வாழியராம்
செங்காட்டடியவி யுண்டவராம்
விஸ்வநாதன்கவி கண்டவராம் 108

